மாவீரர் தின உரை...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச உறவுகள்

சர்வதேச நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாதக் குழுவாகப் பார்ப்பதனையும், இந்நிலைமையானது சமாதானம் ஏற்படுவதில் முட்டுக்கட்டையாக இருப்பதனையும் விபரிக்கும் திரு. பிரபாகரன், உலக நாடுகள் சிலவற்றிலிருந்து கிடைக்கும் உதவிகளைக் கொண்டே சிறிலங்கா இனவழிப்பு நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் விடுதலைப்புலிகள் எந்தவொரு நாட்டினதும் தேசிய நலன்களுக்கு எதிராகச் செயற்படவில்லை என்பதனையும் இந்தியா உட்பட எல்லா நாடுகளுடனும் நட்புறவுடன் செயற்பட விரும்புவதையும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மாவீரர் தின உரையை அலசிக் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கும் முன்னாள் இந்திய இராணுவத் தளபதி கேணல் ஹரிகரன், மும்பை தாக்குதல் நடைபெற்ற சமயத்தில், திரு. பிரபாகரனின் உரை வெளியானதால், இந்தியாவிற்கு தலைவர் விடுத்திருக்கும் செய்தி சென்றடையவில்லை என எழுதியிருக்கிறார்.

ஏதோ மும்பாய் செய்திகள் பத்திரிகையில் இடம் பிடித்ததால் இந்தச் செய்தி முக்கியத்துவம் பெறவில்லை. ஆகவே வழமையாக பத்திரிகையில் அல்லது தொலைக்காட்சியில் பார்த்து விடயங்களை அறிந்து கொள்ளும் இந்திய கொள்கை வகுப்பாளர்கள், இதனைப் பற்றி தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்பது போல் இருக்கிறது அவரது கருத்து.

இருந்தாலும் திரு. பிரபாகரன் இந்தியாவின் நட்பை விரும்பினால், இந்தியாவின் வழிக்கு அவர் வரவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். பரஸ்பர விட்டுக் கொடுப்புகளுடனான உறவுகள் பற்றி இந்திய முன்னாள் இராணுவ அதிகாரிக்கு பரீட்சயமிருக்காது என்பதால் அவரை விட்டு விடுவோம்.

கஸ்தூரி ஐயங்கார் ஆத்துக்காரரின் 'இந்து' திரு. பிரபாகரன் மும்பாய் தாக்குதலைக் கண்டிப்பதாக எதுவும் குறிப்பிடவில்லை எனக் குற்றம் சாட்டியுள்ளது. திரு. பிரபாகரன் உரையாற்றிய நேரம், தொலைநோக்கி புகைப்படக் கருவியுடன் மும்பை தாஜ்மகால் விடுதிக்கு வெளியிலிருந்திருக்கக் கூடிய இந்துவின் புகைப்படக்காரருக்கே உள்ளே என்ன நடை பெறுகிறது என்று தெரிந்திருக்காது. ஆனால் திரு. பிரபாகரன் வன்னியிலிருந்து கண்டன உரையாற்ற வேண்டும் என்று 'இந்து' எதிர்பார்க்கிறது.

உலகத் தமிழர்கள்

தமிழக மக்களின் ஆதரவுக் குரலுக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன் புலம்பெயர்ந்த இளைய சமுதாயத்திற்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

'இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன்.' என்பது அவர் உலகத்தமிழருக்கு விடுத்துள்ள வேண்டுகோள்.

திரு. பிரபாகரனது உரையை முழுவதிலுமாக நிராகரிக்கும், தயான் ஜயதிலக என்ற சிங்கள இனவாதி, இந்த அம்சத்தில் மாத்திரம் கலவரப்படுகிறார். சிறிய கடற் பரப்பால் பிரிக்கப்பட்டிருக்கும், 80 மில்லியன் தமிழர்களின் தார்மீக ஆதரவு ஈழத்தமிழர்களுக்கு கிடைக்குமானால் 18 மில்லியன் சிங்களவர்களின் கதி என்ன ஆகும் என அச்சப்படுகிறார். இது காலம் காலமாக சிங்களவர்களுக்கு உள்ள அச்சம்தான். ஆனால் கடந்த 20 வருடகாலமாகத் தணிந்திருந்தது மீள அவர்களைத் தொற்றிவிட்டது என்பது இந்த சிங்கள இனவாதியின் கருத்துக்களிலிருந்து தெரிகிறது.

எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்காகத் தொடர்ந்து போராடுவோம்

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை அந்தந்த நாட்டுச் சட்டத்திட்டங்களுக்கு அமைவாக செயற்படுமாறு, திரு. பிரபாகரன் வற்புறுத்தியுள்ள போதும், உலகளாவிய பயங்கரவாதத்துக்கு அவர் அறைகூவல் விடுத்ததாக ஐயதிலக பிதற்றியுள்ளார். பயங்கரவாதப் பூச்சாண்டியைக் காட்டியே சிங்கள அரசு தமிழின அழிப்பை தொடர விரும்புவதையே இது காட்டுகிறது.

எதிர்காலம்

அவரது உரையில் சிறிலங்கா அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் எந்தச் செய்தியையும் தெரிவிக்காவிடத்திலும் எல்லோருக்கு பொதுவில் ஒன்றைத் தெரிவிக்கிறார்

'எத்தனை சவால்களுக்கு முகம் கொடுத்தாலும் எத்தனை இடையூறுகளை எதிர்கொண்டாலும் எத்தனை சக்திகள் எதிர்த்து நின்றாலும் நாம் தமிழரின் சுதந்திர விடிவிற்காகத் தொடர்ந்து போராடுவோம். வரலாறு விட்ட வழியில், காலம் இட்ட கட்டளைப்படி சிங்கள அந்நிய ஆக்கிரமிப்பு அகலும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.'

ஈழத்தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரும் அந்த வாசகங்களை, சிங்கள அரசின் பாதுகாப்புத்துறைச் செயலர் ஹெகலிய இரம்புக்வெல ஏளனம் செய்துள்ளார்.

கடந்த 19 ஆண்டு காலத்தில் எத்தனை பாதுகாப்புச் செயலர்களை சிறிலங்கா பார்த்துள்ளது. அடுத்த மாவீரர் தினம் வரைக்கும் இவர் பதவியில் இருப்பாரோ என்னவோ, இந்த தற்காலிகத்தை விடுத்து டி.பி.எஸ், ஜெயராஜின் கருத்துக்களைப் பார்ப்போம்.

கொழும்பிலிருந்து வெளியாகும் டெயிலி மிரர் பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையில் திரு. பிரபாகரனது மேற்படி செய்தியை நிராகரிக்கவில்லை. மாறாக 1987 காலப் பகுதியில் திரு. ஜே. என் டிக்சிற்றுக்கும் திரு. பிரபாகரனுக்கும் இடையிலான உரையாடலையும் அதற்கு பின்னர் நடந்ததையும் சுட்டிக் காட்டி திரு. பிரபாகரன் இவ்விடயத்தில் உறுதியாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக திரு. பிரபாகரனையிட்டான அவதூறுகளையே எழுதிவரும் ஜெயராஜ் அவ்விதம் எழுதியதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனெனில் திரு. பிரபாகரன் பற்றி திருமதி. அடேல் பாலசிங்கம் அவரது சுதந்திர வேட்கை நூலில் எழுதியவற்றை ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

'நீங்கள் பிரபாகரனிடம் கண்டுவியந்த குணாம்சங்களில் முக்கியமானது எது' என அவரிடம் நெருங்கிப் பழகிய திரு. பாலசிங்கத்துடன் கேட்டபோது 'இன்னல்களும், இடர்களும் எழுந்த நெருக்கடியான காலகட்டங்களில் தளராத தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவதுதான் பிரபாகரனின் ஆழுமையில் நான் கண்டு வியந்த அபூர்வமான குணாம்சம்' எனப்பதிலளித்திருக்கிறார்.

அந்த நம்பிக்கையின் வெளிப்பாடு அவரது உரையில் தெரிவதனால், இத்தனை இன்னல்களுக்கும் மத்தியில், அவர்மீது நம்பிக்கை வைத்து செயற்பட உலகத் தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள்.